Registered as a Newspaper

# உதயன்

அன்பளிப்பு

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 03 திங்கட்கிழமை (18-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 22

# மகாராஷ்டிர மாநில ஆளும் கட்சி புலிகளுக்கு முழு ஆதரவு தெரிவிப்பு!

## சிவசேனை தலைவர் அறிவிப்பு

மணிலா, டிசம்பர்; 18

இந்தியாவின் மிக முக்கிய மாநிலங்களில் ஒன்றான மகாராஷ்டிரத்தின் ஆளும் சிவசேனைக் கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பூரண ஆதரவு தெரிவித்திருக்கின்றது.

தாயக மீட்புப் போரில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு தாம் பூரண ஆதரவு தெரிவிப்பதாக மகாராஷ்டிர மாநில சிவசேனைக் கட்சியின் தலைவர் பால் தக்கரே அறிவித்துள்ளார்;

தீவிர இந்துமத சார்புடைய சிவசேனைக் கட்சியும்–

இந்து மத சார்பு போக்குடைய பாரதிய ஜனதாக் கட்சியும் கூட்டணி சேர்ந்து மஹராஷ்டிரத்தில் ஆட்சி அமைத்துள்ளன.

சிவசேனைக் கட்சியின் தலைவரான பால் தக்கரே தீவிர இந்துமத போக்குடையவர் என விமர்சிக்கப்படுபவர்.

தமது சொற்படி இயங்கக் கூடியவர் என தாம் கருதும் — தமது கட்சியைச் சேர்ந்த — மனோகர் ஜோஷி என்பவரை மாநில முதல்வராக பால் தக்கரே நியமித்திருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் போராளிகள் இந்துக்களாக இருப்பதால் அவர்களுக்கு தாம் ஆதரவு வழங்குவதாகவும்—

(6 ஆம் பக்கம் பார்க்ஷ)

## வவுனியாவிலிருந்து மேற்கு நோக்கி இராணுவ நடவடிக்கை ஆரம்பம்?

புதுடில்லி, டிச. 18

வவுனியாவிலிருந்து மேற்கு நோக்கி—மன்னார் பகுதியை நோக்கி படைகள் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

தரைவழிப் பாதை ஒன்றைத் திறப்பதற்காகவே மன்னார் நோக்கிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கப் பட்டிருக்கக் கூடும் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கை பற்றிய மேலதிக தகவல்கள் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போது வரை கிடைக்கவில்லை.

(உ-3)

## அரசிலிருந்து விலகப் போவதாக இ. தொ. காவினர் எச்சரிக்கை!

கொழும்பு, டிச. 18

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் விரைவான தீர்வு காணாவிட்டால் அமைச்சர் தொண்டமான் உட்பட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஒன்பது எம்.பிக்களும் அரசாங்கத்திலிருந்து வெளியேற முடிவு செய்துள்ளனர்.

இ. தொ. கவின் துணைத் தலைவரும், பதுளை மாவட்ட எம். பியுமான ரி.வீ. சென்னன் இந்த அறிவிப்பை விடுத்திருக்கின்றார்.

ஹாலி - எல தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே இந்த அறிவிப்பை சென்னன்விடுத்ததாக ''திவயின'' சிங்கள நாளிதழ் தெரிவித்தது.

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக அரசு கடைப்பிடிக்கும் கொள்கை காரணமாக இந்த அரசிலிருந்து விலக அமைச்சர் தொண்டமான் ஏற்கனவே முயன்றார் என்றும்—

ஆனால் மேலும் சிலகாலம் பொறுக்கும்படி நாங்கள் கேட்டுக்கொண்டதால் அவர் தமது முடிவை தள்ளி வைத்திருக்கின்றார் என்றும்—

சென்னன் மேலும் தெரிவித்தார். (உ-6)

## மனித உரிமைகளைப் பேண செயலணிக் குழு வற்புறுத்து

கொழும்பு, டிச. 18

மனித உரிமைகள் சம்பந்தமான நடைமுறை விதிகளை தகுந்த வகையில் பேணும்படி மனித உரிமைகள் செயலணிக் குழு ஸ்ரீலங்காவின் சட்டம், ஒழுங்கைப் பேணும் ஸ்தாபனங்களைக் கேட்டுள்ளது.

மனித உரிமைகள் சம்பந்தமாக பொலீஸாரும், பாதுகாப்புப் படையினரும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும், இவற்றில் பல குறைபாடுகள் காணப்படுவதாகவும் மனித உரிமைகள் செயலணிக் குழு தெரிவித்துள்ளது.

கைது செய்து காவலில் வைக்கும் விடயத்தில் பொலீஸாரும், பாதுகாப்புப் படையினரும் நடந்து கொள்ளும் விதத்தில் பல முறைகேடுகள் இடம் பெறுவதாக அந்த குழு தெரிவித்துள்ளது.

தற்போது சுமார் 400 பேர் கிளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவர்கள் ஏனைய கைதிகளுடன் ஒப்பிடும் போது தரக் குறைவான முறையில் நடத்தப்படுவதாகவும் அந்த செயலணிக் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

## சித்தாண்டியில் மோதல

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடமேற்கில் உள்ள சித்தாண்டிப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும்இடையில் நேற்று முன் தினம் மோதல்சம்பவம் ஒன்று இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் [illegible] தெரிவித்தது. (உ-3)

## தீவிர பாதுகாப்புடன் இன்று 'சாவ்' போட்டிகள் ஆரம்பம்

சென்னை, டிச. 18

மிகவும் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் ஏழாவது 'சாவ்' விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 3-45 மணிக்கு சென்னை ஜவஹர்லால் விளையாட்டரங்கில் ஆரம்பமாகுகின்றன.

தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்னிலையில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் விளையாட்டுப் போட்டிகளை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ம.தி.மு.க., பாட்டாளி கட்சி ஆர்ப்பாட்டத்துக்குத் தயார்!

சென்னை, டிச. 18

'சாவ்' போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஸ்ரீலங்கா அணியை அனுமதித்ததை ஆட்சேபித்தும் —

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் —

இன்று சென்னையில் 'சாவ்' விளையாட்டுகளின் அங்குரார்ப்பண வைபவம் நடைபெறும்போது அங்கு கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்த மறுமலர்ச்சி தி. மு. கவும், பாட்டாளி மக்கள் கட்சியும் தயாராகியிருப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ராவ் - ஜெயலலிதா கூட்டணி குறித்து பேசுவர்?

சென்னை, டிச. 18

'சாவ்' விளையாட்டுக்களை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்காக பிரதமர் நரசிம்மராவ் இன்று சென்னைக்கு வரும்போது —

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவருடன் அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இன்னும் சில மாதங்களில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டசபைத் தேர்தல்களின்போது அ. தி. மு. க. — காங்கிரஸ் கட்சிகளிடையே கூட்டு வைத்துக்கொள்வது குறித்து இருவரும் நேரடியாகப் பேசி முடிவெடுப்பர் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

## யாழ். சென்ற குழு இன்று சந்திரிகாவிடம் அறிக்கை

கொழும்பு, டிச. 18

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து கொழும்பு திரும்பியுள்ள புனர்வாழ்வுக்கான விசேட செயலணிக் குழு இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்பிக்கவிருக்கிறது.

வீடமைப்பு நிர்மாணத் துறை, பொதுவசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா தலைமையில் யாழ்ப்பாணம் வந்த செயலணிக்குழு யாழ். நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு வேலைகள் குறித்து மதிப்பீடு செய்ததாகவும் —

அது தொடர்பான அறிக்கையே ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக

(6ஆம் பக்கம் பார்க்க)

## ★ யாழ். நகரில் உள்ள மூவாயிரம் பேருக்கும் விசேட அடையாள அட்டை

ஸ்ரீலங்காப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாண நகரில் தங்கியிருக்கும் 3 ஆயிரம் பேருக்கும் விசேட அடையாள அட்டைகள் உடனடியாக வழங்கப்படும் என்று வீடமைப்பு, நிர்மாணத் துறை, பொதுவசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்குச் சென்று திரும்பிய பின்னர் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

யாழ். ஆஸ்பத்திரி சேதமடையவில்லை என்றும் —

இரு மாதங்களில் அது மீண்டும் செயற்பட ஆரம்பிக்கும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களைப் பட்டினி போடும் முயற்சிகளை கண்டிக்கிறது சர்வதேச செஞ்சிலுவைக் குழு

கொழும்பு, டிச. 18
ஆயுத மோதல்களின்போது அப்பாவி குடிமக்களை பட்டினி போட்டு வதைக்க மேற்கொள்ளப்படும் முயற்சியை செஞ்சிலைவச் சங்க சர்வதேசக் குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

மக்கள் தமக்குரிய தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான சூழ்நிலையைப் பேணுவது அவசியம் என்று மோதல்களில் சம்பந்தப்பட்ட தரப்பினரை அந்த அமைப்பு வலியுறுத்திக் கேட்டிருக்கின்றது.

ஜெனிவாவில் கடந்த வாரம் நடைபெற்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கம் ஆகியவற்றின் 26 ஆவது சர்வதேச மாநாட்டில் இந்தக் கோரிக்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜெனிவா சாசனத்தில் கையெழுத்திட்டிருக்கும் 135 நாடுகளின் பிரதிநிதிகள், 164 தேசிய செஞ்சிலுவைச் சங்கங்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுமாக 1200 இற்கும் அதிகமானோர் இந்த மாநாட்டில் பங்கு பற்றினர்.

இந்த மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:-

★ மோதல்களின் போது பாலியல் ரீதியான வன்முறைகளை — குறிப்பாக கற்பழிப்புச் செயல்களை — ஒரு போர்க் குற்றமாக கண்டனம் செய்கிறோம். மனித குலத்துக்கு எதிரான இக்குற்றச் செயலை விசாரணை செய்து, சம்பந்தப்பட்ட சகல குற்றவாளிகளும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்படுவதை உறுதி செய்ய உகந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

★ சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சூழ்நிலைகள் அதிகரித்திருப்பதைத் தவிர்க்குமுகமாக உரிய உறுதியான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும்.

★ கண்ணிவெடிகள் முற்றாகத் தடை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கம் ஆகியவற்றின் ஆதரவு இருப்பதை அரசுகள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

★ பொருளாதாரத் தடைகளை விதிக்கும்போது அல்லது அவற்றை மீள்பரிசீலனை செய்யும்போது இலக்கு வைக்கப்படும் நாட்டின் அல்லது இடத்தின் குடிமக்கள் பாதிக்கப்படாதிருப்பதை உறுதி செய்யவேண்டும்.

★ மனிதாபிமான நெருக்கடிகளின்போது அரசுகளினாலும் அரசுகளுக்கு இடையேயான அமைப்புகளினாலும் ஏனைய சேவை நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்ற மனிதாபிமான நடவடிக்கையையும் அரசியல், இராணுவ அல்லது பொருளாதார நடவடிக்கையையும் தெளிவுற வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய தேவையை அரசுகள் அங்கீகரிக்கவேண்டும்; பக்கசார்பின்றி, சுதந்திரமாக மனிதாபிமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

★ சர்வதேச மனிதாபிமான சட்டங்களை அரசுகள் மதிக்கவேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு தொண்டர் நிறுவனங்களின் பக்கசார்பற்ற சுயாதீனமான சேவைகள் தங்கு தடையின்றி கிடைப்பதையும் உறுதி செய்யவேண்டும்.

(உ)

உணவுப் பொருள்களை

## புலிகள் கைப்பற்றினால் அரச அதிபரே பொறுப்பு

### அமைச்சர் சிறிபால கூறுகிறார்

கொழும்பு, டிச. 18
வடபகுதிக்கான உணவுப் பொருள்கள் மாவட்ட செயலாளர்கள் (அரச அதிபர்கள்) மூலமே அனுப்பி வைக்கப்படுகின்றன. அந்த உணவுப் பொருள்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்படும்சம்பவம் இடம்பெற்றால் சம்பந்தப்பட்ட அதிகாரியே அதற்கு பொறுப்பாளியாகக் கருதப்படுவார்.

—இவ்வாறு வீடமைப்பு, நிர்மாணத்துறை, பொது வசதிகள் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்ததாக ''தஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

(உ)

## உல்லாசப் பயணிகளின் வருகையில் பெரும் வீழ்ச்சி

### அமைச்சரின் கூற்றும் காரணமாம்

கொழும்பு, டிச. 18
புலிகளை அடக்குவதற்காக முழு நாடும் எந்நேரமும் யுத்த நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் பகிரங்கமாக விடுத்த அறிவிப்பினால் —

இலங்கைக்கான உல்லாசப் பயணிகளின் வருகை கணிசமான அளவு வீழ்ச்சி கண்டிருக்கின்றது.

வெளிநாட்டு போக்குவரத்து முகவர் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

வாராந்தம் 450 பயணிகளைக் கூட்டி வரும் இரு ஸ்கண்டிநேவிய போக்குவரத்து நிறுவனங்கள் நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான தமது முன்பதிவுகளை தற்போது ரத்துச் செய்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது உல்லாசப் பயணிகளின் வருகை செப்டெம்பரில் 0.8 வீதத்தாலும், ஒக்டோபரில் 7.9 வீதத்தாலும் இவ்வாண்டு வீழ்ச்சி கண்டிருப்பதாகவும் —

இதற்கு சம்பந்தப்பட்ட சிரேஷ்ட அமைச்சரின் யுத்தம் பற்றிய அறிவிப்பே காரணம் என்றும் —

போக்குவரத்து முகவர் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

## கொழும்புத் துறைமுகத்தில் பாதுகாப்பு தீவிரம்!

கொழும்பு, டிச 18
கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பை கடற்படையினர் மேலும் பலப்படுத்தியுள்ளதாக 'தினமின' சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

துறைமுகத்திற்கு வரும் மற்றும் துறைமுகத்திலிருந்து புறப்படும் சகல கலங்களும் கடற்படையினரின் கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன என்றும் —

துறைமுகத்தின் பாதுகாப்புப் பணியில் துறைமுகப் பொலீசாரும், துறைமுகப் பாதுகாப்புச் சேவையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் —

அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-10)


## உடன் சந்திக்கவும்

யாழ்ப்பாணம் கலியுகவரதன் விற்பனை நிலையத்தில் கணக்காய்வாளராக கடமையாற்றிய

தனபாலசிங்கம் மானிப்பாய்

தயவுசெய்து டச்சு வீதி, சாவகச்சேரியில் இயங்கும் கலியுகவரதன் விற்பனை நிலையத்தில் தொடர்பு கொள்ளவும்.

[39...]


## பருத்தித்துறை வரும் 3 கப்பல்களை காங்கேசன் கொண்டு செல்ல ஏற்பாடு

### உணவு விநியோகத்தை குழப்ப முயற்சி

கொழும்பு, டிச. 18
''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின்போது மீட்கப்பட்ட யாழ் நகரை புனரமைப்பதற்கான கட்டடப் பொருள்களையும், அங்கு வாழும் மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் ஏற்றிக்கொண்டு மூன்று கப்பல்கள் காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பருத்தித்துறைக்கு வரவேண்டிய இக்கப்பல்களை காங்கேசன்துறைக்கு கொண்டு செல்வதன் மூலம் உணவுப்பொருள் விநியோகத்தில் சர்ச்சையையும் குழப்பத்தையும் ஏற்படுத்த அரசு முயற்சிக்கிறது.

இதேவேளை —

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் குடியேறியுள்ள மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தாண்டிக்குளம் ஊடாக லொறிகளில் அனுப்பப்படுவதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்தது.

''லங்கா முடித'', ''லங்கா கல்யாணி'', ''ஹபரண'' ஆகிய மூன்று கப்பல்களே காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டுச் சென்றதாக அறிவிக்கப்பட்டது.

இவற்றில் ''ஹபரண'' கப்பல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருப்பதால், அரசு தான் விரும்பியபடி அக்கப்பலில் பொருள்களை ஏற்றிக்கொண்டு சென்று காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்க முடியுமா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

''லங்கா முடித'' கப்பலில் வடபகுதி மக்களுக்கு ஏற்றி வரப்பட்ட நிவாரணப் பொருள்கள் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து படையினரால் முன்னர் இறக்கப்பட்டதும்—

இதனால் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து இக்கப்பல் சிலகாலம் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் முடக்கி வைக்கப்பட்டிருந்ததும் —

பின்னர் பருத்தித்துறைக்கு பொருள்களை ஏற்றி வரும் பணியில் மட்டும் இக்கப்பல் ஈடுபட்டுவந்ததும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இக் கப்பலையும் மீண்டும் காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு சென்று அங்கு அக்கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதன் மூலம் மீண்டும் சர்ச்சையை உருவாக்க அரசு முயலுமா என்றும் கேட்கப்படுகின்றது.

பருத்தித்துறையில் இறக்குவதற்கான பொருள்களுடன் வடக்கு நோக்கி வந்துள்ள இக்கப்பல் தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கின்றது.

தற்சமயம் தினசரி பகல் வேளையில் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் ''லங்கா கல்யாணி'' அப்பணியைப் பூர்த்தி செய்து விட்டு இன்று கொழும்புக்குப் புறப்பட்டதும் —

'லங்கா முடித' பருத்தித்துறைக்கு வத்து பொருள்களை இறக்க ஆரம்பிக்கும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் யாழ். செயலகத்துக்கு தெரிவித்துள்ளதும் — குறிப்பிடத்தக்கவை.

இதற்கிடையில் —

தற்சமயம் பருத்தித்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'லங்கா கல்யாணி' கப்பல் கொழும்பு திரும்பி யாழ்ப்பாணத்தில் புனரமைப்புக்கு தேவையான கட்டடப் பொருள்களை எடுத்துச் செல்லும் என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ். ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது. (உ-3)

## இலங்கையர் 12 பேரை காணவில்லை

கொழும்பு, டிச. 18
கடந்த ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் திகதி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவரினால் கொழும்பிலிருந்து மாலைதீவுக்கு தொழிலுக்காகக் கூட்டிச் செல்லப்பட்ட 12 பேர் குறித்து இதுவரை தகவல் ஏதும் இல்லை என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்த பன்னிருவரில் ஆறு பேர் தமிழர் என்றும் மற்றொருவர் முஸ்லிம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

மட்டக்களப்பை தாக்குவதுபோல் பாசாங்கு செய்து விட்டு

## திருமலையில் பெரும் தாக்குதல் நடத்துவதற்கு புலிகள் திட்டம்!

கொழும்பு, டிச. 18
மட்டக்களப்பு பகுதியில் உள்ள படையினர் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு ஆயத்தமாவது போல் பாசாங்கு செய்து படையினரதும் பொலீஸாரினதும் கவனத்தை மட்டக்களப்பின்பால் திசைதிருப்பி விட்டு —

திருகோணமலையில் படையினர் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தும் புதிய தந்திரோபாயத்தை புலிகள் பிரயோகிக்க முயற்சிப்பதாக சிரேஷ்ட பொலீஸ் பேச்சாளர்ஒருவர்தெரிவித்தார்என்று ''திவயின'' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான முன்னேற்பாடுகளில் விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கரிகாலன் ஈடுபட்டுள்ளார் என்று படையினருக்கு தற்போது தகவல் கிடைத்துள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

திருகோணமலை உப்புவெளி மற்றும் மூதூர் போன்ற பகுதிகளில் புலிகள் பெருமளவில் நடமாடுகின்றனர் என்றும் —

எனினும் திருமலைப் பகுதிகளில் படையினர்தொடர்ந்து சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும்—

பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாக அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டது. (உ-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளக்கேற்றும் நேரம் புறப்பட்டோம்!

— புதுவை இரத்தினதுரை

(நேற்றைய தொடர்ச்சி)

கையிற் பிடித்து இழுத்துவந்த
முதுமை சில மூச்சைத் துறந்தன.
கரையிற் கிடத்தி வந்தோம்.
மூச்சுத்திணறிய சின்னப்பூக்கள் சில
பேச்சுக் குரலடங்கிப் போயின.
தூக்கியபோது பிள்ளையாகவும்,
கிடத்தியபோது பிணமாகவும் இறக்கினோம்.
உப்பேரிக்குள் ஒரு பாதை உருவாக்கி
இறங்கிய சிலர்
கழுத்தளவு நீரிற் கரைந்தனர்.
பின்னர் கைதடியில் இணைந்தனர்.
சிலர் சேற்றில் அமிழ்ந்து போயினர்.
பேரும் தெரியாத அந்தப் புதியவரை
யாரும் தேடவில்லை.
தேடும் நிலையிலுமில்லை.
பத்துமணிக்கு நிலவு பட்டுப்போக
எத்தனை இடர்பட்டோம்.
எவருக்கும் எவரையும் தெரியவில்லை.
ஒரு கைக்கணக்கில் ஊர்ந்தோம்.
கணவனின் கைபிடித்து வந்தவள்
இன்னொருவனிடம் இடம்மாறிப் போனாள்.
பேச்சுக் குரலில் பின்னர் இனம்கண்டு
பெயர் சொல்லிக் கூப்பிட்டாள்.
பெருவெளியில் எதிரொலித்தது சத்தம்.
நாமங்கள் சொல்லிக் கூவிய குரல்கள்
நாவற்குழியையே நடுங்க வைத்தது.
பாலுக்கழுதன வாய்கள்.
முலையிருந்தும் முடிச்சவிழ்க முடியாது
தனக்குள் அழுதது தாய்மை.
பசிக்குதென்று சொல்லிற்று பிள்ளை.
பெற்றவள் வயிறு பற்றியெரிந்தும்
பேசாமல் வாவெனச் சொல்லி நடந்தது.
தண்ணீர் கேட்டன தளிர்கள்.
என்ன செய்ய முடியும்?
கடல் நீரையா காட்டலாம்?
காதில் ஏறாத பாவனையில்
யாரும் வாயே திறக்கவில்லை.
பயணம் தொடர்ந்தது.
ஊரழுத கண்ணீரால்
உப்பேரி ஒரு அங்குலம் உயந்தது:
மழை நீரும், விழி நீரும் கலந்து
தமிழீழம் நனைந்தது.
போயாறும் இடமின்றிப் புறப்பட்டோம்.
எங்கு போய்த் தங்குவது?
வழிநெடுக இதுவே கனத்தது,
கொட்டும் மழை,
குதறும் குளிர்,
கும்மிருட்டு,
கையிற்சுமை,
வயிற்றிற் பசி,
எனினும் நடந்தோம்.
பெருமைக்குரிய வாழ்வுக்கதிபதிகள்
எச்சில் இலைபோல...
தெருவில் எறியப்பட்டோம்.
தலைமுறையாக வாழ்ந்த விசாலமான வீடு.
தலைவாசலில் மட்டும்
நூறுபேர் உறங்கலாம்.
முற்றத்தில் பந்தலிட்டால்
மூவாயிரம் பேர் அமரலாம்.
பால் சுரக்கும் பட்டிக் கறவைகள்;
ஆழக் கிணறு..., அதனுள் அமிர்தம்.
ஆரதக்கறி சமைக்கும் அடுப்படி.
அடிவளவில் ஐம்பது தென்னை.
குடைவிரித்து நிழல் பரப்பும் வேப்பமரம்.
மெல்லத்தழுவிச் சுகம் கேட்கும் காற்று.
வந்தமர்ந்து கூவும் வசந்தக்குயில்.
முற்றத்து துளசி மாடம்.
இன்னும் பலவாய் எல்லாமுமிருந்த வாழ்வுதறி
இனிய கனவேதுமற்ற மனதுடன்
நாம் நடந்தோம்.
மூன்றிரவும், இரண்டு பகலும் முடிய
வலிகாமம் வழித்துத் துடைக்கப்பட்டது.
அந்தளவு சனமும்
தென்மராட்சியில் அடைக்கலம்பெற்று
ஆறியது.
எந்தப் பெரிய துயரேற்றோம்.
எனினும் தளரவில்லை.
வந்த மறுநாளே
எம் வாழ்வு மீண்டும் துளிர்த்தது.
கொட்டில் கட்டக் கப்புகள் தேடினோம்.
கிடுகு பறித்தோம்.
ஆங்காங்கு முளைத்தன குடிசைகள்.
தலை குனிந்து செல்லும்
சிறுகொட்டிலானாலும்,
நீடடிப்படுக்க நிலமில்லையானாலும்,
''பேயிடம் பிடிபடாதோர்'' என்ற பெருமை
எம் தலைமுறை கொண்டது.
பூமிப்பந்து எம்மைப் புதிதாய்ப் பார்த்துப்
புல்லரித்துக் கொண்டது.
''ஆற்றலின் வடிவமென்று'' ஆமோதித்தது.
தமிழீழத்தின் ஒரு தலை முறை
விடுதலைக்குக் கொடுத்த விலையிது.
என்றோ ஒரு நாள்;
எத்தனை வருடங்களானாலும்,
எங்கள் பரம்பரை தெரிந்து கொள்ளும் இதை.
அது போதும்.
விளக்கேற்றும் நேரம் புறப்பட்டோம்.
துயருற்ற போதும் மகிழ்வுற்றோம்.

(முற்றும்)

ஜனாதிபதி சந்திரிகா பேட்டி:

# யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்தும் ராணுவம் ஆக்கிரமித்து இருக்காது!

## சிவில் நிர்வாகத்தை உறுதி செய்வதே நோக்கமாம்

கொழும்பு, டிச. 18

இராணுவம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து அங்கே நிலைகொண்டிருக்க மாட்டாது.

சிவில் நிர்வாகத்தை மீண்டும் நிலைநாட்டி, யாழ்ப்பாணத்தையும், வடபகுதியையும் தமிழ்மக்கள் நிர்வகிப்பதை உறுதிசெய்வதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும்.

— இவ்வாறு கூறியுள்ளார் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி தேசியக்கொடியைப் பறக்கவிட்ட பின்னர் அமெரிக்க ''ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து இராணுவம் கைப்பற்றியதன் மூலம் பெற்ற வெற்றி இலங்கை வரலாற்றில் முக்கிய நிகழ்வுதான்.

ஆனால் ''யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைந்து விட்டது'' என்ற பதத்தை நான் பயன்படுத்த விரும்பவில்லை.

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியதன் காரணத்தால் தமிழ்மக்கள் மனம் நொந்து போயுள்ளனர் என்ற கூற்றை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பாதுகாப்புப் படையினர் துணிச்சலோடும், உற்சாகத்தோடும் சேவையாற்றக் கூடியவர்கள். அவர்கள் திறமையான பயிற்சியும், ஆற்றலும் பெற்றவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இனநெருக்கடிக்கு இராணுவ ரீதியிலான தீர்வல்ல, அரசியல் அடிப்படையிலான தீர்வே இறுதியானது என்பதை எப்பொழுதும் வலியுறுத்தி வந்துள்ளோம். இந்த வெற்றி சமாதானத்துக்கான ஒரு முக்கிய வெற்றியாகும்.

குறைந்த பட்சம் இப்போதாவது தாங்கள் வெல்லப்பட முடியாதவர்கள் அல்லர் என்பதை விடுதலைப் புலிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைக்கு வருவார்களேயானால் அது வரவேற்கத்தக்கது. ஆனால் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு இணங்காவிட்டாலும் கூட இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகளை தொடர்வதில் நாம் உறுதியாக இருக்கிறோம்— என்றார்.

(உ-3)

அரசாங்கம் பாராமுகம்

# வன்னிக்கு இடம் பெயர்ந்தோருக்கு இன்னும் உணவுப் பொருள் இல்லை

சாவகச்சேரி, டிச. 18

வன்னி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை அரசு இன்னும் அனுப்பவில்லை என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்துள்ள சுமார் இரண்டரை லட்சம் மக்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் மெற்றிக்தொன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் தேவை என்றும் —

குறிப்பிட்ட எண்ணிக்கையான லொறிகளில் மட்டும் உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படுவதால் உணவுப் பொருள் பற்றாக்குறை ஏற்படும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் இருந்தே இந்த மக்கள் இடம் பெயர்ந்துள்ள காரணத்தால்—

யாழ். செயலக அதிகாரிகள்கிளிநொச்சி அரச அதிபருடன் இணைந்து கொழும்பில் இருந்து பொருள் எடுத்து வர முயற்சிக்க வேண்டும் என்றும் ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போதிய உணவுப் பொருள்களை அரசு அனுப்பாத காரணத்தால் உணவு விநியோகத்தை சரிவர செய்ய முடிய வில்லை என்று கிளிநொச்சி செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(உ-3)

# சிங்கக் கொடியை காலால் மிதித்தவர் தடுத்து வைப்பு!

கொழும்பு, டிச. 18

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் போது யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதை கொண்டாடும் முகமாக வீடு ஒன்றில் ஏற்றப்பட்டிருந்த சிங்கக் கொடியை கழற்றி நிலத்தில் போட்டு மிதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

தெல்தெனிய பொலீஸ் வட்டாரத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரின் வீட்டில் ஏற்றப்பட்ட கொடியைக் கழற்றி காலில்போட்டு மிதித்ததாக ஒருவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்தே பொலீஸாரால் சம்பந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் வீட்டில் கசிப்புத் தயாரிப்பதற்கான உபகரணங்களும் கசிப்பு, கோடா ஆகியவையும் சட்ட விரோதமாக வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து தெல்தெனியா மாஜிஸ்திரேட் கே.பி. நந்த நாரயண முன்னிலையில் சந்தேக நபரை பொலீஸார் ஆஜர் செய்தனர்.

அவரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார் மாஜிஸ்திரேட்.

(உ)

ஒரு வருட காலத்துக்குள்

# கண்டியில் தொண்டாவை நாம் தோற்கடிப்போம்!

## ஐ. தே. கவின் எம். பி. சூளுரை

கொழும்பு, டிச 18

'ஒரு வருடத்துக்குள் கண்டி மாவட்டத்தில் தொண்டமானைத் தோற்கடிப்போம். அவரது தொழிற்சங்க அங்கத்தவர்களின் எண்ணிக்கையை விட அதிக அங்கத்தவர்களை நாம் பெறுவோம்.''

இவ்வாறு சூளுரைத்தார் ஐ.தே.கவின் கண்டி மாவட்ட எம்.பியான சரத் அமுனுகம.

கண்டி ஐ.தே க தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

''அமைச்சர் தொண்டமான் இன்று முதுமையடைந்துவிட்டார். அவர் ஒரு மைல் தூரம் நடக்கும் போது நாம் ஐந்து மைல் நடந்து சென்றுவிடுவோம். அவர் ஜீப்வண்டி ஒன்றைப் பெற்றால் நாம் ஐந்து ஜீப் வண்டிகளைப் பெறுவோம்.''

''நாம் தோட்டம் தோட்ட

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் புலிகள் தாக்கலாம்; எச்சரிக்கிறார் பொலீஸ் மா அதிபர்

கொழும்பு, டிச. 18

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சம் காரணமாக கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும்—

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தப்படுவது தொடரும் என்றும்—

பொலீஸார் தெரிவித்திருப்பதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் கொழும்பில் தனது நடவடிக்கைகளை நிறுத்தி விட்டது என்று எவரும் கருதக்கூடாது. பொதுமக்கள் தொடர்ந்தும் எச்சரிக்கையாகவும், உஷாராகவும் இருக்க வேண்டும்.—என்று பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டது.

தமது பகுதிகளில் புதிதாக எவரும் வந்தால் அல்லது அயலவர்கள் வழமைக்கு மாறாக நடந்து கொண்டால் அது குறித்து அண்மையிலுள்ள பொலீஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

இப்பொழுது விழாக்காலம் என்பதால் பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தமாக மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் பொலீஸ் மா அதிபர் கோரியதாக அறிவிக்கப்பட்டது.

(உ-7)

## உ. கிழங்கு இறக்குமதிக்கு இனி அனுமதி இல்லை

கொழும்பு, டிச 18

உருளைக்கிழங்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிப்பது கடந்த வெள்ளிக்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது,

சந்தைகளில் உருளைக் கிழங்கு போதியளவு இருப்பில் இருப்பதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இறக்குமதிக் கட்டுப்பாட்டாளர் காமினி விக்கிரம சூரியா தெரிவித்தார்

ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் அந்த அனுமதியை இந்த மாதத்துக்குள் பயன்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூர் உருளைக் கிழங்கின் விற்பனைகளை அதிகரிப்பதற்காகவே இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-7)

## மந்திகை ஆஸ்பத்திரியின் 'எக்ஸ்ரே' இயந்திரம் பழுது

மந்திகை, டிச. 18

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியின் 'எக்ஸ்ரே' பிரிவில் இயங்கி வந்த 'எக்ஸ்ரே' இயந்திரம் கடந்த வெள்ளியன்று பழுதடைந்ததை அடுத்து கடந்த இரு நாட்களாக அவசர நோயாளர்களுக்கு 'எக்ஸ்ரே' எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுளது.

பழுதடைந்த இயந்திரத்தை திருத்தியமைப்பதற்கான முயற்சிகள் தற்போது வைத்தியசாலை நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை மந்திகையில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையின் 'எக்ஸ்ரே' பிரிவும் இன்று முதல் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான ஆயத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ-15-173)

## நூறு தமிழர் கொழும்பில் கைது

கொழும்பு, டிச. 18

தலைநகர் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடந்த வியாழனன்று தேடுதல் வேட்டை நடத்திய ஸ்ரீலங்காப் படையினரும் பொலீஸாரும் பல இளம் யுவதிகள் உட்பட நூறு தமிழர்களைக் கைது செய்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

[உ-3]

## விலங்கு வேளாண்மை கலந்துரையாடல்

வன்னி பெருநிலப்பரப்பில் விலங்கு வேளாண்மை அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கச்சாய் வீதி கொடிகாமத்தில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கோட்டச்செயலகத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை பத்து மணிக்கு நடைபெறும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விலங்கு வேளாண்மைப் பகுதியினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பண்ணையாளர்கள், கால்நடைவளர்ப்போர், கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள், கோழிக் குஞ்சு விநியோகஸ்த்தர்கள், கால்நடை வைத்தியர்கள், கால்நடை அபிவிருத்தி, போதனாசிரியர்கள், மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது.

(உ)


## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய நிலையிலுள்ள வில் செயர் (Wheel chair) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் தீன்சுவை வெதுப்பகம், துறைமுக வீதி, பருத்தித்துறை. (39540)

### ஜோதிடம்

மாவை விநாயகர் ஜோதிடம், அதிர்ஷ்டம் அழைக்கிறது. உங்கள் ஜாதக பலன் சரியாகக் கூறப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம், பகல் 12.00 மணி வரை. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலடி, கரவெட்டி கிழக்கு. பிற்பகல் நெல்லண்டை ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில் பிரதம குரு இல்லத்திலும் சந்திக்கலாம். (39539)

### தவறிவிட்டது

5317620488V இலக்க அடையாள அட்டை 13- 12- 95 அன்று கிளாலிக்கும், சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க. நவரத்தினராஜா, மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத் தலைமை அலுவலகம், சங்கத்தானை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (39533)

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவீன சந்தையில் இயங்கிவந்த ''ராசி சில்க்ஸ்'' தற்போது கண்டி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (C/3053)

## நோயாளரின் கவனத்திற்கு

**MEDICAL CLINIC AND SURGERY**

இலக்கம் 5, மணல்தறை லேன், கந்தர்மடத்திலும், 29, நாவலர் றோட், நாவாந்துறையிலும் இயங்கிய

எனது வைத்திய நிலையம் தற்பொழுது டச்சு றோட், சங்கக்கடை ஒழுங்கை, சாவகச்சேரியில் திரு. வைத்திலிங்கம் சோமசுந்தரம் வீட்டில் இயங்குகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

Dr. K. சத்தியசீலன்

தற்போதைய முகவரி:-
Dr. K. சத்தியசீலன்
C/o வைத்திலிங்கம் சோமசுந்தரம்,
டச்சு றோட்.
சங்கக்கடை ஒழுங்கை, சாவகச்சேரி. (39532)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 30-12-1970 மறைவு: 19-11-1995

அமரர்

நடராசா உமாகரன்

(ஜேகோவா சாட்சி பிரசாபித்தர்)

இன்று (18-12-95) திங்கட்கிழமை அன்னாரின் ஆத்மசாந்திக்காக பளை, தர்மக்கேணியிலுள்ள எமது தற்காலிக வதிவிடத்தில் பிரார்த்தனை நடைபெறுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கின்போது உதவி புரிந்த நண்பர்கள், உறவினர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

[39527)

## தொடர்பு கொள்ளவும்

செல்லப்பா கடை நாரந்தனையைச் சேர்ந்த வட்டுக்கோட்டையில் வசித்து வந்த
நடராசா நாகேஸ்வரி
கொக்குவிலைச் சேர்ந்த
இராசதுரை
என்பவர்கள் எங்கிருந்தாலும் ந.முத்துக்கிருஸ்ணனுடன் (தியாகு) தொடர்பு கொள்ளவும்.

முகவரி:
ந. நவரெட்ணம்,
112/2, வலதுகரை, முத்தையன்கட்டு,
ஒட்டிசுட்டான்.

(49642)

## YOGI HOME SCIENCE ACADEMY
## YOGI BEAUTY PARLOUR

நிர்வாகி
திருமதி யோகினி சண்முகநாதன்

அவர்களை தொடர்பு கொள்ள விரும்பும் மாணவிகள் மற்றும் நண்பர்கள் கீழ்காணும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்

தென்மராட்சியில்:-
M. ஜெகதீஸ்வரன்,
19, மகளிர் கல்லூரி வீதி,
சாவகச்சேரி.

வடமராட்சியில்:-
செல்வி M. கிருஷ்ணபிள்ளை
'பொன்மொழியார்கம்'
வதிரி, கரவெட்டி,
(Beacon Tuition அருகில்)

(39641)

## ராசி சில்க்ஸ்

நத்தார், புதுவருட

# மலிவு விற்பனை

**18-12-95** தொடக்கம் **1-1-96** வரை.

| | பழைய விலை | தற்போதைய விலை |
|---|---|---|
| மாட்டின் சேட் | 400/- | 350/- |
| கசின் சேட் | 435/- | 360/- |
| ரேக் சேட் | 700/- | 600/- |
| யான் சேட் | 750/- | 650/- |
| மைக்கிரோ பூனம் சாரி | 600/- | 400/- |
| வெல்வைற் பூனம் சாரி | 675/- | 525/- |
| சிக்கிபோ (Sikkiboo) | 900/- | 650/- |
| பட்டபிளை சாரி | 850/- | 675/- |
| போச்சமல்லி | 1050/- | 850/- |
| சரிதா சாரி | 1000/- | 800/- |
| காஞ்சி கொட்டன் சாரி | 1250/- | 900/- |
| தாரிகா சில்க் | 1100/- | 850/- |
| மைசூர் சில்க் | 1400/- | 1250/- |
| ரெம்பிள் சில்க் | 1750/- | 1550/- |
| றிபில் போடர் சில்க் | 2250/- | 1950/- |
| காஞ்சிபுரம் (றிபில் போடர்) | 2500/- | 1900/- |
| காஞ்சிபுரம் (பாட்லி) | 1850/- | 1500/- |
| செந்தூரப்பூவே பனாறிஸ் | 2400/- | 2100/- |
| றிம்சிம் பனாறிஸ் | 3400/- | 2950/- |
| பாட்லி பனாறிஸ் | 4750/- | 4250/- |
| ரெயின்போ பனாறிஸ் | 5500/- | 4500/- |
| கூறை சாரிகள் | 6000/- | 4750/- |
| பிலீட் கொடி கூறை சாறி (பாட்லி) | 6500/- | 5500/- |
| சில்வர், கோல்ட்ஸ் பனாறிஸ் | 6500/- | 5750/- |

ஸ்கேட்ஸ் & பிளவ்ஸ், சூட் இன்னும் பல.

ராசி சில்க்ஸ்
கண்டி வீதி, கொடிகாமம்.

(சி/3150)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கோட்பாடு மாறவில்லை

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு புதிதாக 11,500 சிங்கள இளைஞர்கள் திரட்டப்பட்டுவிட்டனர். அவசர அவசரமாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ள இந்த இளைஞர்களுக்கு இரண்டு மாத காலம் பயிற்சி வழங்கப்படும். அதன் பின்னர் உடனடியாகச் சேவையில் அமர்த்தப்படுவர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆட்பலம் ஏற்கனவே 90,000 துருப்புக்களாக இருந்தது. புதிய ஆட்சேர்ப்புடன் படையணி ஒரு லட்சத்தையும் தாண்டி நிற்கிறது.

பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய உயிரிழப்புகளையோ, உடைமைச் சேதங்களையோ, ஏனைய பொருளாதார அழிவுகளையோ பொருட்படுத்தாமல் —

படையணிகள் மிகப் பெரும் எண்ணிக்கையில், மடை திறந்த வெள்ளம் போல திரண்டு வந்தால் மட்டுமே, தமிழ் மண்ணை ஆக்கிரமிக்க முடியும் என்ற புதிய இராணுவ உத்தியை அமெரிக்க இராணுவ நிபுணர்கள் ஸ்ரீலங்கா இராணுவ உயர் அதிகாரிகளுக்குச் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும்.

அந்த உத்தியைக் கையாண்டு தான், யாழ்ப்பாணத்தை — வலிகாமத்தை — இராணுவத்தால் ஆக்கிரமிக்க முடிந்தது. அந்த உற்சாகத்தில் மேன்மேலும் படையணிகளைப் பெருக்க அரசு முனைகிறது.

போரைத் தொடர்வதானால் புதிதாக மேலும் ஐம்பதினாயிரம் பேர்களைப் படையில் சேர்க்க வேண்டும் என்று அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி கூறியதன் மறைமுகமான உள்ளர்த்தம், படைபலத்தைப் பெருக்குவது என்பதேயாம்.

களத்தில் இறந்து போகும் சிப்பாய்களின் குடும்பங்களுக்கு புதிது புதிதாக சேமநலத்திட்டங்களை அரசு அறிமுகப்படுத்தி வருகிறது.

இறந்த சிப்பாய்களின் குடும்பங்களுக்கு இலவசமாகக் காணி வழங்குதல், வீடு கட்டிக் கொடுத்தல், பிள்ளைகளுக்கு வங்கிகளில் பணவைப்பு, கல்விப் புலமைப் பரிசில்கள் என்று ஏராளமான நலன்புரித் திட்டங்களை சந்திரிகா அரசு அறிமுகப்படுத்தி இருக்கிறது. இத்திட்டங்களை கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகாவே அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

பாதுகாப்பு நிதிக்கு பெரும் பணத்தை ஒதுக்குவதும், சிங்கள இளைஞர்களைப் படையில் சேருவதற்கு பல்வேறு வகைகளாலும் ஊக்கமும், உற்சாகமும் அளிப்பதும் தமிழர்களை இராணுவ ரீதியாக ஒடுக்கும் நோக்கத்துக்கான நடவடிக்கைகளே.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை இராணுவ அடக்குமுறையால் நசுக்குவது என்ற சிங்களப் பேரினவாதக் கோட்பாட்டில் இருந்து சந்திரிகா ஓர் அங்குலம் தானும் பிறழவில்லை என்பதற்கான சான்றுகளே இந்த நடவடிக்கைகள்.

ஆகவே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதாகச் சந்திரிகா கூறுவது தண்ணீர் மேல் எழுத்துப் போன்றதே.

தமிழ் இளைஞர்கள் அரசின் இந்த நடவடிக்கைகள் கண்டு விழிப்படைய வேண்டும். போர் ஒன்றே விடிவு தரும் என்பதனை உணரவேண்டும். எழுச்சி கொள்ள வேண்டும்.

# மதவாச்சிப் பகுதியில் நிலநடுக்கம்!

# பெரும் பூகம்பம் ஒன்றுக்கு அறிகுறி?

கொழும்பு, டிச. 18

இலங்கையில் அடுத்தடுத்து இரண்டு நில அதிர்வுகள் ஏற்பட்டிருப்பதை அடுத்து எதிர்காலத்தில் இங்கு பெரும் நில நடுக்கம் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த பத்தாம் திகதி இரவு 8-30மணியளவில் மாத்தளை மற்றும் கண்டிப் பகுதிகளில் ஏற்பட்ட நில அதிர்வு சுமார் அரைமணி நேரம் நீடித்தது.

அதற்குப் பின்னர் கடந்த செவ்வாய் (12 ஆம் திகதி) மாலை 5-45 மணிக்கு மதவாச்சி பொலீஸ் பகுதியில் சுமார் பத்து நிமிட நேரம் நில நடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த நில நடுக்கத்தால் உயிர், உடைமைச் சேதம் ஏதும் ஏற்படவில்லை என மதவாச்சி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ. ஜெயலத் தெரிவித்தார்.

''பெரும் குண்டு வெடிப்புக்கு பின் ஏற்படும் அதிர்வு போல் நிலத்துக்குக் கீழ் சுமார் பத்து நிமிட நேரம் நிலக்குமுறலை உணர முடிந்தது. அப்பகுதியில் குண்டு வெடிப்போ வன்செயல் சம்பவமோ எதுவும் இடம்பெறவில்லை. இது நிலநடுக்கமே என்பது பின்னர் இடம்பெற்ற விசாரணைகளில் இருந்து தெரிய வந்தது

''இத்தகைய நிலநடுக்கம் எதிர்காலத்தில் இடம்பெறக் கூடிய பெரும் பூமியதிர்ச்சிக்கான முன்னறிவிப்புக்களே'' — என்று முன்னாள் பூகர்ப்பவியல் பேராசிரியர் பி. டபிள்யூ. விதானகே தெரிவித்தார்.

முன்னர் இத்தகைய நில நடுக்கம் எதுவும் மதவாச்சிப் பகுதியில் ஏற்பட்டதற்கான தகவல் ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

''வன்னிப் பாறைகளும், கண்டியைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள பாறைகளும் சந்திக்கும் இந்த மதவாச்சிப் பிரதேசம் மிகவும் பலவீனமானதாகும். அதனால் இங்கு பூமியதிர்ச்சி ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

''மிரிங்வெட்டிய தாது கோபுரப் பகுதிகள் இடிந்து வீழ்வதற்கும் இத்தகைய உள் — நில அதிர்வுகள் — காரணமாக இருக்கக்கூடும்.

''இந்த அடிப்படையில் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.'' — இவ்வாறு பேராசிரியர் விதானகே மேலும் தெரிவித்தார்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரும் கண்டி, மாத்தளைப் பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ)

## இடர் களைய வேண்டி பிரார்த்தனை

கோவில்குடியிருப்பு, டிச. 18

தமிழ் மக்களின் இடர் களைய வேண்டி பிரார்த்தனையும், பூசை வழிபாடுகளும் இன்று கச்சாய் வீதி நாவலடிப் பிள்ளையார் கோவிலில் இடம்பெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் இப் பிரார்த்தனை இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை வரை நடைபெறும். (அ-30)

### வடக்கே வரும் லொறிகள்

## சாந்தசோலைப் பகுதியில் மட்டுமே இனிச் சோதனை

கொழும்பு, டிச 18

வடபகுதிக்கு பொருள்களை ஏற்றிவரும் லொறிகள் இனிமேல் வவுனியாவில் சாந்தசோலை என்ற இடத்தில் மட்டுமே சோதனைக்கு உட்படுத்தப்படும்.

—இவ்வாறு மூத்த பொலீஸ் அத்தியட்சகர் நிமால் லெவிகே தெரிவித்துள்ளார்.

இதுவரை வடபகுதிக்கு பொருள்களை ஏற்றிவரும் லொறிகள் ஈரப்பெரியகுளத்தில் உள்ள சோதனை முகாமில் சோதனைக்கு உட்படுத்தப்படுவதும் —

பின்னர் அந்த லொறிகள் சாந்தசோலைக்கு கூட்டிவரப்பட்டு அவற்றில் இருக்கும் பொருள்கள் அங்கு வைத்து இறக்கப்பட்டு, வடபகுதியிலிருந்து அப்பகுதிக்கு வரும் லொறிகளில் அவை ஏற்றப்படுவதும் —

இதுவரை நடைமுறையில் இருந்த வழக்கமாகும்.

ஆனால் தற்பொழுது வடபகுதிக்கு நாளாந்தம் வரும் லொறிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து இனிமேல் சாந்தசோலையில் வைத்து பொருள்கள் சோதனை செய்யப்பட்டு அங்கு வைத்தே வடபகுதியிலிருந்து செல்லும் லொறிகளுக்கு அவை மாற்றப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தென்பகுதியிலிருந்து வவுனியா வரும் லொறிகள் மட்டுமே இனி ஈரப்பெரிய குளத்தில் வைத்து சோதனைக்கு உட்படுத்தப்படும் (உ-9-10)

## மரணமான 4 வயோதிபர்

சாவகச்சேரி, டிச. 18

சாவகச்சேரி நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் கைதடி வயோதிபர் இல்லத்தில் சேர்க்கப்பட்டிருந்த வயோதிபர்களுள் கடந்த ஏழாம் திகதிக்குப் பின்னர் மரணமான நால்வரின் விவரங்கள் தெரிய வந்துள்ளன.

மரணமானவர்களின் விவரமும் இறந்த திகதியும் வருமாறு:-

★ ச. வேலாயுதபிள்ளை (7-12-95)
★ இராசா (7-12-95)
★ தையல்நாயகி (8-12-95)
★ நவரத்தினம் (13-12-95)

(உ-31-6)

## இருண்ட அறைக்குள் இருந்து கறுப்புப் பூனையை தேடும் முயற்சி!

### தமிழ்க் கட்சிகள் பற்றி விமரிசனம்

கொழும்பு, டிச. 18

''இருண்ட அறைக்குள் இருந்து கொண்டு கறுப்புப் பூனையைத் தேடிப் பிடிப்பது போல தமிழ்க் கட்சிகள் செயற்படக்கூடாது''.

இப்படிக் கூறுகிறார் துறைமுகங்கள், கப்பற்றுறை, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம் அஷ்ரப்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசுகையிலேயே அமைச்சர் தமிழ்க் கட்சிகளை இப்படி விமர்சித்தார்.

''யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்த சரியான தலைமைத்துவம் வேண்டும். இங்குள்ள தமிழ்க் கட்சிகளுக்கு அந்தத் திறமை இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.'' — என்றும் அமைச்சர் அஷ்ரப் மேலும் தெரிவித்தார். (உ-3)

# கிழக்கில் இராணுவ நடவடிக்கை தகவல் வெளியானதால் தோல்வி

## செய்தி நிறுவனங்களைச் சாடுகின்றது ராணுவம்

கொழும்பு, டிச. 18

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் படையினர் மேற்கொண்ட. இராணுவ நடவடிக்கை குறித்து முன்னரே பகிரங்கப்படுத்தப்பட்டு விட்டதால் அந்த நடவடிக்கை பலனளிக்காமல் போய்விட்டதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவ பீரங்கிப் படை மற்றும் விமானப் படையின் வான் தாக்குதல்கள் ஆகியவற்றின் உதவியுடன் விசேட அதிரடிப்படையினர் கிழக்குக் காடுகளில் கடந்த செவ்வாயன்று இரு பெரும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனால் விடுதலைப் புலிகளுடன் எந்த மோதலும் இடம்பெற்றதாக அறிவிக்கப்படவில்லை.

விசேட அதிரடிப் படையினர் முன்னேறுவதற்கு முன்னரே விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து வெளியேறியிருக்க வேண்டும்—இவ்வாறு இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

விசேட அதிரடிப் படையின் தாக்குதல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அவை இடம்பெறவுள்ள பிரதேசம், காலம் ஆகியவை பற்றிய விவரங்களை அரச மற்றும் தனியார் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் வெளியிட்டதனால் தாக்குதல் நடவடிக்கை பலனற்றுப் போனதாகத் தெரிவித்து, அந்த வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மீது இராணுவப் பேச்சாளர் கண்டனக் கணை தொடுத்தார்.

தகவல் முன்னரே கசிந்து விட்டதால் அப்பகுதியிலிருந்து தங்கள் வீரர்களைப் புலிகள் நேரத்துடனேயே விலத்தி விட்டார்கள்'— என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக பொலீஸ் விசாரணைக் குழுவினர் அரச சார்பு வெகுஜனத் தொடர்பு சாதன அலுவலகம் ஒன்றுக்குச் சென்று அதன் செய்தி ஆசிரியரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளனர்.

பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு, விசேட அதிரடிப் படைத் தளபதியான பிரதி பொலீஸ் மா அதிபர் தர்மசிறி வீரக்கோன் ஆகியோர் கூறியதாகத் தெரிவித்து —

இரண்டு நாள்களுக்கு முன்னதாகவே கிழக்கில் தாக்குதல் இடம்பெறுவது பற்றிய தகவலை —

வானொலியும், தொலைக்காட்சியும் அறிவித்தன.

ஆனால் தாங்கள் செய்தியாளர்களுக்கு இத்தகைய தகவல் எதனையும் வழங்கவில்லை என பொலீஸ் மா அதிபரும், சம்பந்தப்பட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபரும் மறுத்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து விசாரணை நடத்தி இதற்கு சூத்திரதாரியானவரைக் கண்டுபிடிக்கும்படி பொலீஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

— இவ்வாறு கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது. (உ)

### நிதி நெருக்கடியைச் சமாளிக்க

## பஸ் கட்டணங்களை அரசு 40 வீதத்தினால் உயர்த்தும்?

கொழும்பு, டிச. 18

பஸ் கட்டணங்களை நாற்பது சதவீதத்தினால் உயர்த்தும்படி அரசுக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கின்றது.

இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட திரசேகரா குழு இத்தகைய சிபாரிசு அடங்கிய அறிக்கையை போக்குவரத்து, சுற்றுப்புறச் சூழல், மகளிர் விவகார அமைச்சர் சிறிமானி அத்துலத்முதலியிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த சிபார்சை ஏற்று, பஸ் கட்டணங்களை உயர்த்துவதா என்பது குறித்து அமைச்சரவை முடிவு செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புச் செலவினம் எக்கச்சக்கமாக உயர்ந்திருப்பதால் பெரும் நிதி நெருக்கடியை அரசு எதிர்நோக்கியிருப்பது தெரிந்ததே.

இந்நிலையில் பஸ் கட்டணங்களை உயர்த்துவது போன்ற முறைகளில் வருவா[illegible] என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## கண்டியில்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகச் சென்று அனைத்து மக்களது பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு, கண்டி மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தோட்டங்களிலும் மக்களை எமது அமைப்பில் சேர்த்துக் கொள்வோம்.'' இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியருக்கு சம்பள உயர்வு வழங்க ஆணைக்குழு சிபார்சு!

கொழும்பு, டிச 18

ஏழு லட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கவேண்டும் என்ற பொரிசு அடங்கிய அறிக்கை ஒன்றை சம்பள ஆணைக்குழு இந்தமாத இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கையளிக்க இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

அரச ஊழியர்கள், நீதித்துறை ஊழியர்கள், பாதுகாப்புப் படையினர், சம்பளக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வரும் 105 சபைகள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் ஆகியோருக்கே சம்பள உயர்வு வழங்க சிபாரிசு செய்யப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பள ஆணைக்குழுவின் செயலாளர் டி. விஜேசிங்க இத்தகவல்களை வெளியிட்டார். (உ)

## வீரச்சாவு

சாவகச்சேரி, டிச. 18

அம்பாறையில் கடந்த 13ஆம் திகதி இரவு 9 மணிக்கு ஏற்பட்ட தவறுதலான துப்பாக்கிச் சூட்டில் வீரவேங்கை கோணேஸ் (அண்ணாத்துரை இராஜதுரை — அக்கரைப் பற்று) வீரமரணமடைந்தார் என அறிவிக்கப்படுகின்றது. (உ-3)

## ரஷ்ய கீழ்ச் சபைக்கான தேர்தல் நேற்று நடந்தது

ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழ் சபைக்கான தேர்தல்கள் நேற்று நடைபெற்றன.

இத்தேர்தல் அரசியல் மாற்றங்களை கொண்டு வரும் எனக் கூறமுடியாது விட்டாலும் எதிர்வரும் ஜூனில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் எப்படி வாக்களிப்பார்கள் என்பதை அறியும் ஒரு முக்கிய சோதனையாக இது இருக்கும் என்று கருதப்படுகிறது.

இத்தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் மக்கள் ரஷ்யாவின் புதிய ஜனநாயகத்துக்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கிறார்கள் என்றும் —

அவர்கள் தம்மை அச்சுறுத்தும் உள்நாட்டு போரில் இருந்தும், சமுதாயப் பிணக்குகளில் இருந்தும் தம்மை பாதுகாக்கிறார்கள் என்றும்—

தலைமைத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

முதியோர்கள் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் இளம் வயதினர் புரட்சிவாதிகளுக்கும் வாக்களித்ததாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## வயிற்றோட்டத்திற்கு ஒரே நாளில் 4 பேர் பலி!

சாவகச்சேரி, டிச. 18

வயிற்றோட்ட நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்கென சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் —

நேற்று முன்தினம் மட்டும் நால்வர் மரணமானார்கள்.

இவர்களில் ஒருவர் நான்கு மாதக் குழந்தை. வயிற்றோட்டம் காரணமாக அனுமதிக்கப்பட்டு செப்ரிசீமியாவால் இக் குழந்தை மரணமானது.

உயிரிழந்த நால்வரின் விபரமும் வருமாறு:-

★ நடராஜா ஜெயநந்தினி (வயது 4 மாதம்), அராலி மேற்கு,

★ கே. அழகரத்தினம் (வயது68), மீசாலை, சாவகச்சேரி வடக்கு.

★ பரமையா வரதராஜா (வயது 10), சிவன் கோவிலடி, சாவகச்சேரி.

★ வேலையா பத்மா (வயது 2), சேர்ச்லேன், சாவகச்சேரி.

இறந்த நால்வரும் வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கி இருந்தவர்கள் ஆவர். (அ-13)

## பாதுகாப்புக் கருதி

## ஆடம்பரமின்றி நடந்த ஐ. தே. கவின் மாநாடு

கொழும்பு, டிச. 18

பாதுகாப்புக் கருதி ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு நேற்று பரபரப்பின்றி மிகவும் சுருக்கமான முறையில் நடத்தப்பட்டது.

வழக்கமாக சுகததாஸ உள்ளக அரங்கில் பெரும் ஆர்ப்பாட்டமாக நடத்தப்படும் இந்த மாநாடு இம்முறை பாதுகாப்புக்காக கொழும்பு கோட்டேயில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

ஏனைய கட்சிகளுக்கோ வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கோ, தூதுவர்களுக்கோ இம்முறை மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கட்சியின் புதிய தவிசாளராக ஹரி ஜெயசூரிய நியமிக்கப்பட்டதை வருடாந்த மாநாடு நேற்று அங்கீகரித்தது.

ஐ. தே. க. சரியான — புதிய — பாதையில் நடைபோடும் என்று கட்சியின் த்லைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மாநாட்டில் உரையாற்றும் போது அறிவித்தார். (உ-3)

## ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி

## கட்சியின் மாநாட்டை பொலீஸ் தடை செய்தது!

கொழும்பு, டிச 18

இரத்மலானையில் நேற்று நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது தேசிய மாநாடு கல்கிசை பொலீஸாரின் தலையீடு காரணமாக இடையில் நிறுத்தப்பட்டது.

இந்த மாநாடு ஆரம்பமான போது பொலீஸ் கோஷ்டி ஒன்று அங்கு சென்று மாநாட்டுக்கு எதிராக தடை உத்தரவு இருப்பதாகக் கூறி கூட்டத்தை நடத்த முடியாது என தெரிவித்த போது அங்கு குழப்பம் ஏற்பட்டது.

பொலீஸாரிடம் தடை உத்தரவுப் பிரதி இருக்கவில்லை என கட்சிப் பிரமுகர்கள் சுட்டிக் காட்டியதை அடுத்து பொலீஸார் திரும்பிச் சென்றனர்.

இதன் பின் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த போது, பொலீஸ் கோஷ்டி தடை உத்தரவுப் பிரதியுடன் திரும்பி வந்து கூட்டத்தை நடத்த விடாது தடுத்தது என்று அறிவிக்கப்பட்டது.

## ராஜீவ் கொலை விசாரணை:

## கோவை மறைந்ததற்காக பிரதமர் ராவ் மீது வழக்கு?

புதுடில்லி. டிச. 18

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை விசாரணை பற்றிய முக்கிய கோவை தொலைந்தது தொடர்பாக பிரதமர் நரசிம்மராவ் மீது உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர போட்டிக் காங்கிரஸின் உத்தரப் பிரதேச பிரிவு முடிவு செய்துள்ளது.

உத்தரப் பிரதேச மாநில போட்டிக் காங்கிரஸ் தலைவர்கள் லக்னோவில் செய்தியாளர்களிடம் இத்தகவலை வெளியிட்டனர்.

முக்கிய கோவை காணாமல் போனது குறித்து நாடாளுமன்றத்தில் பிரதமர் ராவ் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். அவரது மௌனம் பல கேள்விகளை எழுப்புகின்றது.—என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

ராஜீவ் கொலைபற்றி விசாரணை நடத்திய வர்மா கமிஷன் சம்பந்தப்பட்ட கோவையே காணாமல் போனது என்பது தெரிந்ததே. [உ]

## யாழ்...

(1 ஆம் பக்கந் தொடர்ச்சி)

வும் — தெரிவிக்கப்பட்டது.

செயலணிக் குழுவினர் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். பல்கலைக் கழகம், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை, நல்லூர் முருகன் ஆலயம், பண்ணைப் பாலம் ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்தது என அறிவிக்கப்பட்டது. (உ-3)

## பாதிப்புற்ற தமிழருக்கான உதவி பொருள்கள் அரசிடம்

சாவகச்சேரி, டிச. 18

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கென சர்வதேச அமைப்புகள் வழங்கும் நிதி மற்றும் நிவாரணப் பொருள்கள் ஸ்ரீலங்கா அரசால் மக்களுக்கு ஒழுங்காக அனுப்பப்படாத போதிலும் —

தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான உதவிகளை அரசசார்பற்ற அமைப்புக்களும் பல அரசுகளும் ஸ்ரீலங்கா அரசிடம் வழங்கி வருகின்றன.

நோர்வே அரசு பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மக்களுக்காக 7 கோடியே 5 லட்சம் ரூபாவை ஸ்ரீலங்கா அரசுக்கு வழங்கியுள்ளது. (உ-3)

## தீவிர பாதுகாப்புடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளையாட்டுப் போட்டிகளை ஒட்டி தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஐயாயிரம் பொலீஸாரும் ஏழாயிரம் பாதுகாப்புப் படையினரும் விசேட சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்காவிலிருந்து இப்போட்டிகளில் பங்குபற்றும் 450 வீரர்களுக்கும் தனித்துவமான பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-7)


# இடமாற்ற அறிவித்தல்

கு. தர்மலிங்கம்

383, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எனும் எமது ஸ்தாபனத்தில் அடகு வைத்தவர்கள் தற்காலிகமாக கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளவும்.

# ரட்ணம் பார்மஸி

கண்டி வீதி, சாவகச்சேரி.

[39643]


## மகாராஷ்டிர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் போராளிகளின் கோரிக்கைகள் நியாயமானவை என்றும்—

விடுதலைப் புலிகளின் பலத்தை வீணடிப்பதற்குப் பதிலாக, புலிகளுடன் பேசி தீர்வு காணும் முயற்சியில் இந்தியா, பாகிஸ்தான் ஆகியவை ஈடுபட வேண்டும் என்றும் —

பால் தக்கரே கூறியதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இந்தியப் பொதுத்தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கையில் —

ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்புடைய முன்னணிக் கட்சிகளில் ஒன்றாக பாரதீய ஜனதாக் கட்சி கருதப்படும் இச்சந்தர்ப்பத்தில் —

அக்கட்சியுடன் ஒட்டி உறவாடி, அக்கட்சி போன்று தீவிர இந்துப் போக்கை வெளிப்படுத்துகின்ற சிவசேனை அமைப்பு, புலிகளுக்கு ஆதரவு தெரிவித்திருப்பது இந்திய தேசிய அரசியல் அரங்கில் முக்கிய நிகழ்வாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ-3-6)

## ம. தி. மு. க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக அறிவிக்கப்படுகின்றது.

ம.தி.மு.க. தொண்டர்கள் அக்கட்சியின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமியின் தலைமையிலும் —

பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் அக்கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் தலைமையிலும் —

ஆர்ப்பாட்டம் செய்வர் என அறிவிக்கப்படுகின்றது. (உ-3-7)

## ஏறாவூர் - செங்கலடியில் வெள்ளியன்று தேடுதல்

சாவகச்சேரி, டிச. 18

மட்டக்களப்பில் ஏறாவூர் முதல் செங்கலடி வரையான — தமிழ் மக்கள் வாழும் — பிரதேசங்கள் கடந்த வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் படையினரால் முற்றுகையிடப்பட்டு தீவிர தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனால் இங்கிருந்து மட்டக்களப்புக்கு ஜி. சீ. ஈ. பரீட்சை எழுதச் செல்ல வேண்டிய மாணவர்கள் அதற்குச் செல்லமுடியாது போனதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## இப்படியும் நடக்கிறது!

சாவகச்சேரி, டிச. 18

இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கும் அவர்களுக்கு தங்குவதற்கு இடம் கொடுத்த வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு முற்றி, மோதலில் முடிந்தது.

மோதலின் போது வீட்டுச் சொந்தக்காரப் பெண்ணும், அவரது மகனும், மகனுக்கு உதவிக்கு வந்த அவரின் நண்பரும் காயங்களுக்கு ஆளாகி சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதலின் போது கத்தி, கோடரி, கம்புகள் பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

வீட்டுச் சொந்தக்காரர்களை வீட்டை விட்டு வெளியே போகுமாறு கூறியவாறு இடம் பெயர்ந்தவர்கள் தாக்கியுள்ளதாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நுணாவிலில் நேற்று மாலை5 மணியளவில் இடம் பெற்றது. இடம் பெயர்ந்தவர்கள் சுன்னாகத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறியப்படுகிறது. (அ-13)

## விலை உயர்வு

சகல பால் மா வகைகளின் விலைகளையும் ஸ்ரீ லங்கா அரசு உயர்த்தியுள்ளது.

400 கிராம் எடை கொண்ட 70 ரூபா விற்ற நெஸ்பிறே பால்மா 78 ரூபாவாகவும்—

அங்கர் பால் மாவின் விலை 78 ரூபாவாகவும் —

68 ரூபா 50 சதமாக விற்ற லக்ஸ்பிறே 75 ரூபாவாகவும் உயர்த்தப்பட்ள்ளது.

## தமிழகத்துக்கு அதிகாரிகள் குழு

கொழும்பு, டிச 18

தமிழ் நாடு அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்காக கடற்றொழில் அமைச்சைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று நேற்று தென்னிந்தியா புறப்பட்டுச் சென்றது.

85 இலங்கை மீனவர்களையும் அவர்களது 23 வள்ளங்களையும் தமிழக அரசு தடுத்து வைத்துள்ளது. (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 18-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org